அனுப்புநர்

திரு. டாக்டர் எம். வீரப்பன் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு மாவட்டம்.

பெறுநர்

மக்கள் செய்தி தொடர்பு அலுவலர்,
மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**ந.க.எண்.901/அ6/2026 நாள் : .06.2026**

பொருள் : தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் - 2026-27 இரண்டாவது கட்டமாக 15 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல் - மாநில, மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்களை தேர்வு செய்ய விண்ணப்பங்கள் பெற்றிட பத்திரிக்கை செய்தி வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை : மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், அவர்களின் கடித ந.க.எண் : TNCDW/402/2026/PC-1 நாள் : 10.06.2026.

-----

உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகள் ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்காக தமிழ்நாட்டில் முதற்கட்டமாக 6 மாவட்டங்களில் இத்திட்டம் 2023-24 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தேசிய திட்ட மேலாண்மைப்பிரிவு (NMMU) 2026-27 முதல் 15 மாவட்டங்களில் இரண்டாவது கட்டமாக இதனை விரிவுபடுத்த அறிவுறுத்தியுள்ளவாறு முகவரியில் காணும் 15 மாவட்டங்கள் இரண்டாவது கட்ட செயல்பாட்டிற்கென தேர்வு செய்யப்பட்டுள்ளன.

உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் ஒருங்கிணைப்பு செயல்பாட்டிற்கென தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு வழிமுறைகளுக்கேற்ப இத்திட்டத்தில் ஆரம்பநிலையில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வள பயிற்றுநர்கள் பின்வரும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மாநில வள பயிற்றுநர்கள் (SRP) | மாநில வள பயிற்றுநர்கள் 3 மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 15 மாவட்டங்களுக்கு 5 நபர்கள் |
| மாவட்ட வள பயிற்றுநர்கள் (DRP) | மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 15 நபர்கள் |

| | |
|---|---|
| வட்டார வள பயிற்றுநர்கள் (BRP) | வட்டாரத்திற்கு ஒருவர் வீதம் 161*1=1161, மதிப்பூதியம் நாளொன்றிற்கு ரூ.450/- வீதம* 10 நாட்கள். கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் ஆவணப்படுத்துதலுக்கு அதிகபட்சம் 15 நாட்கள் *ரூ.300/- வீதம். பயணப்படி நாளொன்றிற்கு ரூ.60/- வீதம்* 25 நாட்கள். ஆக மொத்தம் = ரூ.10,500/- |
| உள்ளூர் வள பயிற்றுநர்கள் (LRP) | கிராம ஊராட்சி அளவில் ஏற்கனவே உள்ள CRP(P&C) மற்றும் CST, நாளொன்றிற்கு நபருக்கு ரூ.100/- என்ற வீதத்தில் மாதம் 10 நாட்கள் ஈடுபடுத்தலாம். மொத்தம் 1000*2=2000. |

மாநில, மாவட்ட மற்றும் வட்டார பயிற்றுநர்களுக்கான தகுதி, விண்ணப்பித்தல் மற்றும் தேர்வுமுறை ஆகியவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்படும் மாநில வள பயிற்றுநர் அவருக்கு ஒதுக்கப்படும் 3 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பட மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மாவட்ட வள பொறுப்பாளர்கள் அவர்களுக்கான மாவட்டத்திலும் வட்டார வள பொறுப்பாளர்கள் அவர்களுக்கான வட்டாரத்திலும் தங்களது பணியினை மேற்கொள்ள வேண்டும்.

இத்துடன் தங்களுக்கு இணைத்தனுப்பியுள்ள வழிகாட்டு நெறிமுறைக்கேற்ப மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வள பொறுப்பாளர்கள் தேர்வுக்கு தங்கள் மாவட்டத்திலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் அனைத்து விவரங்களையும் தவறாமல் செய்தி குறிப்பு வெளியிட்டும் பிரதான அரசு அலுவலகங்களில் செய்தி பலகைகளிலும் அறிவிப்பு செய்தும் கீழ்காணும் கால விவரப்படி பணியாளர்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| வரிசை எண் | நடவடிக்கை | நாள் |
|---|---|---|
| 1. | SRP/DRP/BRP பணிகளுக்கான விண்ணப்பங்களைப் பெறுவது குறித்த மக்கள் தொடர்பு அலுவலர் (PRO) வாயிலாக பத்திரிக்கை செய்தி வெளியிடுதல் | 15.06.2026 |
| 2. | விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி நாள் | 29.06.2026 |
| 3. | மாவட்ட அளவில் BRP-களைத் தேர்வு செய்வதற்கான குழுவை அமைத்தல் மற்றும் அதிகாரிகளுக்குப் பணிகளை ஒதுக்கித் தெரிவித்தல் | 17.06.2026 அல்லது அதற்கு முன் |

| | | |
|---|---|---|
| 4. | விண்ணப்பதாரர்களின் தகுதி குறித்த முதற்கட்ட சரிபார்ப்பு | 30.06.2026 |
| 5. | SRP/DRP பணிகளுக்கான தகுதியான விண்ணப்பங்களின் பட்டியலைத் தலைமையகத்திற்கு (H/O) அனுப்புதல் | 02.07.2026 |
| 6. | SRP/DRP பணிகளுக்கான எழுத்துத் தேர்வு | 13.07.2026 அல்லது அதற்கு முன் |
| 7. | TNSRLM மற்றும் CRISP இணைந்து நடத்தும் நேர்காணல் | 20.07.2026 அல்லது அதற்கு முன் |
| 8. | மாவட்ட அளவில் BRP-களுக்கான எழுத்துத் தேர்வு மற்றும் பிற தேர்வுகள் | 15.07.2026 அல்லது அதற்கு முன் |

தேர்வு செய்யப்படவுள்ள அனைத்து நிலை வள பயிற்றுநர்களுக்கும் ஜூலை 2026 மூன்றாவது வாரத்தில் பயிற்சி அளிக்க உள்ளதால் கால அட்டவணையை தவறாமல் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**தகுதிகள் : -**

வட்டார வள பயிற்றுநர்கள் (BRP) அடையாளம் காணுதல் மற்றும் தேர்வுக்கான தகுதி நிபந்தனைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வயது | 01.06.2026 - அன்று 25-45 வரை |
| கல்வி | நேரடி கல்லூரி கல்வியில் பிரிவில் குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு |
| அனுபவம் | சுய உதவிக்குழுக்கள் / கூட்டமைப்புகளுடன் பணியாற்றிய 3 வருட அனுபவம், பயிற்றுநர், சமூகப்பணியாளர், வாழ்வாதாரத் திட்ட அனுபவம், முன்னாள் வட்டார வள பயிற்றுநர் (BRPs) மற்றும் பிற அரசுத் துறைப் பயிற்றுநர்கள் (மற்ற அனைத்துத் தகுதிகளும் அப்படியே இருக்கும் பட்சத்தில், முன்னாள் வட்டார வள பயிற்றுநர் முதல் முன்னுரிமை வழங்கப்படும்). |
| கணினி அறிவு | அலுவலக பணிகளுக்கான மென்பொருள் பயன்படுத்துதல் (MS.Word, போன்றவை), ஆண்ட்ராய்டு மொபைல் பயன்பாடுகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். |
| மொழிகள் | படிக்க, எழுத மற்றும் பேச - தமிழ், ஆங்கிலம் |

மேற்காணும், தகுதிகள் அடிப்படையில் மற்றும் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வள பயிற்றுநர்களுக்கு 29.06.2026-க்குள் வட்டாரங்களில் இருந்து தகுதியான விண்ணப்பங்கள் பெற்றிட பத்திரிக்கை செய்தி வெளியிட உத்தரவிடப்படுகிறது.

**இணைப்பு :- பத்திரிக்கை செய்தி**

**ஒம்/-**
மாவட்ட ஆட்சித்தலைவர்
செங்கல்பட்டு மாவட்டம்

**//உண்மை நகல் உத்தரவுபடி//**

இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - செங்கல்பட்டு மாவட்டம்
# மாநில, மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள்
# தேர்வு செய்யப்படவுள்ளது குறித்த பத்திரிகை செய்தி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினை முழுமையாக்கும் திட்டப் பணியின் இரண்டாம் கட்ட செயல்பாடுகள் மேலும் 15 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதற்கென மாநில மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்திற்கான தற்காலிகப் பணியிடங்கள்

| வ.எண். | பணி விபரம் | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | மாநில வளப் பயிற்றுநர் | ஒன்று (மூன்று மாவட்டத்திற்கு ஒருவர் என பின்னர் தேர்வு செய்யப்படுவர்) |
| 2. | மாவட்ட வளப் பயிற்றுநர் | ஒன்று |
| 3. | வட்டார வளப் பயிற்றுநர் | 8 வட்டாரத்திற்கு ஒன்று வீதம் |

## வள பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் பயணப்படி விவரம்

| வ. எண் | வள நபர்களின் விவரம் | மதிப்பூதியம் | கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் ஆவணப்படுத்துதல் | பயணப்படி நாளொன்றுக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாநில வள பயிற்றுநர்கள் (SRP) | ரூ.1000/- அதிகப்பட்சம் 10 நாட்களுக்கு | ரூ.750/- அதிகப்பட்சம் 15 நாட்களுக்கு | ரூ.250/- 15 நாளுக்கு | ரூ.25,000/- அதிகப்பட்ச மாக |
| 2. | மாவட்ட வள பயிற்றுநர்கள் (DRP) | ரூ.750/-அதிகப்பட்சம் 10 நாட்களுக்கு | ரூ.500/- அதிகப்பட்சம் 15 நாட்களுக்கு | ரூ.120/- 25 நாளுக்கு | ரூ.18,000/- அதிகப்பட்ச மாக |

| வ. எண் | வள நபர்களின் விவரம் | மதிப்பூதியம் | கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் ஆவணப்படுத்துதல் | பயணப்படி நாளொன்றுக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 3. | வட்டார வள பயிற்றுநர்கள் (BRP) | ரூ.450/-அதிகப்பட்சம் 10 நாட்களுக்கு | ரூ.300/- அதிகப்பட்சம் 15 நாட்களுக்கு | ரூ.60/- 25 நாளுக்கு | ரூ.10,500/- அதிகபட்சமாக |

<u>மாநில வள பயிற்றுநர் :-</u>

1. பெண்கள் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. கல்வித்தகுதி : சமூக கல்வி / சமூக அறிவியல்/ஊரக வளர்ச்சி / பெண்கள் கல்வி அல்லது சமூக பணியிடங்களில் ஏதேனும் ஒரு முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
3. வயது : 01.06.2026 அன்று 30-45 க்குள் இருக்க வேண்டும்.
4. அனுபவம் :10 ஆண்டுகள், சுயஉதவிக்குழு /கூட்டமைப்பில் பணியாற்றிய அனுபவம் /பயிற்றுநர் / சமூக பணி நிறுவனத்தில் பணியாற்றியது அல்லது அரசின் திட்டத்தில் ஊரக பணிகளில் பணியாற்றி இருக்க வேண்டும்.

<u>மாவட்ட வள பயிற்றுநர் :-</u>

1. பாலினம் : பெண்கள் (சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை) அளிக்கப்படும்.
2. வயது : 30-45 (1.6.2026 அன்றுள்ளபடி) இருக்க வேண்டும்.
3. தகுதி : ஏதேனும் முழு நேரக்கல்வி முறையில் முதுகலை படிப்பில் ஒரு பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.
4. அனுபவம் : 4 வருடங்கள் இருக்க வேண்டும்.

<u>வட்டார வள பயிற்றுநர் :-</u>

1. பாலினம்: பெண்கள் (சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை) அளிக்கப்படும்.
2. வயது : 25-45 (1.6.2026 அன்றுள்ளபடி) இருக்க வேண்டும்.
3. கல்விதகுதி : ஏதேனும் முழு நேரக்கல்வி முறையில் ஒரு பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.
4. அனுபவம்: 3 வருடங்கள் இருக்க வேண்டும்.

**மேலும் மாநில, மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்களுக்கான கூடுதல் தகுதிகள் பின்வருமாறு :**

1. மொழி : தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுத, பேச தெரிந்திருத்தல்.
2. திறன் : தகவல் பரிமாற்றத்தில் தகுந்த திறன், ஒருங்கிணைப்பு, மனித உறவுகளை பேணுவதில் ஆற்றல், கைபேசி, செயலிகளை கையாள்வது. கணினியில் word, excel, இணைய பயன்படுத்துதலில் போதிய அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

இப்பதவிக்கான தகுதி மற்றும் விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பங்களை 29.06.2026-குள் விண்ணப்பம், தகுதி குறித்த சுய சான்றிட்ட நகல்களுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. இப்பணியிடங்களுக்கு எழுத்துத்தேர்வு, நேர்காணல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.

இப்பணியிடங்கள் இத்திட்டத்திற்க்கான 24 மாத காலவரையறை கொண்ட தற்காலிக பணியிடங்களாகும்.

| |
|---|
| திட்ட இயக்குநர்<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்<br>2 வது தளம், A பிளாக், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>செங்கல்பட்டு மாவட்டம் |

மேலும் விபரங்களுக்கு https://tncdw.org என்ற இணையதளத்தை அணுகலாம்.

**ஒம்/-**
மாவட்ட ஆட்சித்தலைவர்
செங்கல்பட்டு மாவட்டம்

**//உண்மை நகல் உத்தரவுபடி//**

இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
செங்கல்பட்டு மாவட்டம்.